Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



Pc PARADISE

நியாயமான விலையில் தரமான கணனிகளையும்
கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)

TP No. 0777-271220

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 21 (27.11.2002) புதன்கிழமை இதழ் : 57

## மாவீரர்கள் தினம் இன்று அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

என்றுமில்லாத வகையில் இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் நாள் இன்று வட-கிழக்கில் மட்டுமல்லாது உலகின் பல நாடுகளிலும் மிக எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் வழமைக்கு மாறாக வட-கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மிகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சிலபேருக்குச் சில விசயங்களை அழுத்திச் சொன்னால் தான் விளங்கும் கண்டியளோ...



ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு மாநாட்டின் முடிவில் எடுத்துக்கொண்ட படம்.

### தலைவரின் உரை இன்று உலகெங்கும்



இன்றைய தினம் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் குரல் உலகம் முழுவதும் ஒலிக்கவுள்ளது.

இந்த ஆண்டுக்கான மாவீரர் தின உரையைத் தேசியத்தலைவர் இன்று நிகழ்த்தும்போது அவரின் உரையைப் பல சர்வதேச ஒளி, ஒலிபரப்பு நிறுவனங்கள் நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா கருதும் பயங்கரவாதம் புலிகளுக்குப் பொருந்தமாட்டாது!

## செய்தியாளர்களிடையே அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு



(ஒஸ்லோ)

**அரசியல் தீர்வுகளின் மூலம் எமது மக்களினது உரிமைகள் எப்போது எட்டப்படுகிறதோ, அப்போது வன்முறைகள் தானாகவே ஓய்வடைந்து விடும். அமெரிக்கா பயங்கரவாதம் எனக் கருதுவது எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பொருந்தாது எனப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா புலிகளை வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்துவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. பயங்கரவாதச் செயல்கள் என அமெரிக்கா கருதுவது எமக்கு எவ்வகையிலும் பொருந்தாது.

அதேவேளை - சமாதான முயற்சிகளில் புலிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததென அமெரிக்கா கருதுகின்றதென்பதை இம்மாநாட்டில் அது பங்குகொள்வதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளின் அடிப்படையில், அமெரிக்கா 1997இல் விடுதலைப் புலிகள் மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த கட்ட பேச்சுக்களுக்காக புலிகளின் குழு புறப்படுகின்றது

## வன்னியிலிருந்து நாளைமறுதினம் ஒஸ்லோ செல்லும்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்காக விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினர் நாளைமறுதினம் வன்னியில் இருந்து ஒஸ்லோ நகருக்குப் புறப்படவிருக்கின்றனர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் மூத்த தளபதி கருணா ஆகியோர் அடங்கிய குழுவினரே வன்னியிலிருந்து புறப்பட்டுச் செல்லவிருக்கின்றனர்.

உலங்குவானூர்தி மூலமாக நாளை கிளிநொச்சியிலிருந்து இக்குழுவினர் பயணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்குழுவினர் கொழும்பு சென்று அங்கிருந்து விமானம் மூலம் ஒஸ்லோவுக்குச் செல்லவுள்ளனர்.

## மருதங்கேணியில் நேற்று கடற்புலிகள் அணிவகுப்பு

(மருதங்கேணி)

மாவீரர் தினத்தையொட்டி மருதங்கேணி குடாப்பரப்புப் பகுதியில் நேற்று கடற்புலிகளினதும், கடற்கரும் புலிகளினதும் அணிவகுப்புகள் நடைபெற்றன.

ஓயாத அலைகள் தாக்குதல் நடவடிக்கையின் நினைவுப்பலகை மருதங்கேணிச் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

இதனையொட்டி மருதங்கேணிச் சந்தியில் இருந்து தாளையடி மைதானம் வரையில் கடற்புலி அணிகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

கடற்கரும்புலிகள் முகத்தை மறைத்துக் கொண்டு இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டனர். கடற்புலி களின் சிறப்புத் தளபதி சூசை, கடற் புலிகளின் தளபதி லெப்டினன்ட் கேணல் மங்களேஸ், கேணல் பல்லவன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### திருமலை நகரில் முதலாவது மாவீரர் தினம்



*திருகோணமலை நகரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் முதல் தடவையாக மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் திருகோணமலை நகரப்பொறுப்பாளர் வி.ராஜேஷ் தேசியக்கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: திருகோணமலைச் செய்தியாளர்)*

## வடக்கு - கிழக்கு இணைப்பு

# சர்வஜன வாக்கெடுப்பினை நடாத்த ஜனாதிபதி முயற்சி!

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது பற்றி சர்வஜன வாக்கெடுப்பொன்றை அடுத்த ஆண்டு நடத்த வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாக அவருக்கு நெருங்கிய கட்சி உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தோ - ஏஷியன் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இத்தகவலைத தெரிவித்தார். தன்னை யாரென அவர் இனங்காட்டவும் விரும்பவில்லை.

1988இல் அரசியலமைப்பின் வழியாகத் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை - நிரந்தரமாக இணைப்பது

(12ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் நேரடி ஒளிபரப்பாக தேசியத் தலைவர் பிரபாவின் உரை!

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை நாளை மாலை நேரடி ஒளிபரப்பாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ரி.ரி.என். தொலைக்காட்சி நிறுவனம் செய்துள்ளது.

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019

(சி-148)

# புலிகளின் காவல்துறை, நீதிமன்றங்களை சமாதானத்திற்காக பொறுத்துக்கொள்கிறோம்

## நீதியமைச்சர் லொக்கு பண்டார நாடாளுமன்றத்தில் பேச்சு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நீதிமன்றங்களையோ, பொலிஸ் நிலையங்களையோ அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது என்று நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுலில் இருப்பது ஒரே ஒரு நீதி முறையும், நீதிமன்ற மும்தான் என்றும் அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

இந்த நிலைமை தொடர்பாக அரசாங்கம் உறுதியான நிலைப் பாட்டைக் கொண்டிருக்கிறது. இருந்த போதிலும் சமாதானத்தை நோக்கிய பாதையில் இடர்களைத் தவிர்ப்ப தற்காக, இது போன்ற நடவடிக்கை களைப் பொறுத்துக்கொள்ள வேண் டியிருக்கிறது என்றும் நீதி அமைச் சர் லொக்கு பண்டார மேலும் கூறி னார்.

# நாட்டை அபிவிருத்தி செய்வதற்கேற்ப புதிய வெளிநாட்டுக் கொள்கை வகுப்பு

## வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச உதவி பெறுவதற்காக அரசாங்கம் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியிருந்ததாக வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர் ணான்டோ நேற்றுமுன்தினம் நாடா ளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார ரீதியில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக - புதிய வெளிநாட்டுக் கொள்கை ஒன்றைக் கடைப் பிடிப்பதற்கு தமது அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே, அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- நாட்டின் சமாதான நடவடிக்கைக ளுக்கு இந்திய அரசாங்கத்தின் பூரண ஆதரவு கிடைத்துள்ளது. சமாதான நடவடிக்கை தொடர்பாக நடை பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் நல்ல முடிவுகள் கிடைக்கப் பெற்றன.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங் கைக்கு உதவி வழங்கும் நாடுக ளின் கூட்டத்தில் 40 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ரோக்கியோவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கிடைக்கவிருக்கின்ற நிதி யின் எட்டு வீதத்தை ஜப்பான் வழங் கவிருக்கின்றது என்றும் கூறினார்.

## 1500 தென்னங்கன்றுகள் பளையில் விநியோகிக்கப்படும

பளைப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட இடங்களில் மீளக்குடிய மர்ந்த மக்களுக்கு, தென்னங்கன்று களை வழங்கவென 1500 தென்னம் நாற்றுக்கள் பொலநறுவையிலிருந்து எடுத்துவரப்பட்டன.

## வழக்குத் தாக்கல்

(மல்லாகம்)

அரச படையினருடன் சேர்ந்து தம்மைத் தாக்கியதாக உடுவிலைச் சேர்ந்த வை.உதயராசா என்பவர், மல்லாகம் நீதிமன்றத்தில், அரியரத் தினம் கேமச்சந்திரா என்பவர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

## தொழில்நுட்பக் கல்லூரி செயல்முறைப் பரீட்சை

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி 2002ஆம் ஆண்டுக்கான தொழில் துறைப் பகுதி செய்முறைப் பரீட் சைகள் யாவும், டிசெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதென யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.செந்தில்நாதன் அறிவித்துள் ளார்.

## ஓட்டோ சங்கம் சார்பில் மாவீரர் நாள் நிகழ்வு

மண்ணுக்கு உரமாகி, தமிழ் மக் களின் விடிவுக்காய் வித்தாகிய மாவீ ரர்களின் நினைவு நாளையொட்டி யாழ். ஓட்டோ சங்கத்தினாலும் நிகழ் வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ். - நல்லூர் அரசடிச் சந்தி ஓட்டோ தரிப்பிடத்தின் உரிமையா ளர், சாரதிகள் இணைந்து பந்தல் அமைத்தனர். அங்கு நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்குத் தேசியக் கொடி யேற்றியதுடன், மாவீரர்களின் பெற ரோர்களால் திருவுருவப்படங்களுக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. பின நினைவுரையும் நிகழ்த்தப்பட்டது.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



பெயர் : தி.காயத்திரி
முகவரி: இராமலிங்கம் வீதி, உடுவில் கிழக்கு.

இரண்டாவது அகவையில்.



பெயர் : சி.யுபிதா
முகவரி: இராஜபவனம், புலோலி தெற்கு.

மூன்றாவது அகவையில்.



பெயர் : பு.துவாரகா
முகவரி: சண்டிலிப்பாய் கிழக்கு, சண்டிலிப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

--------------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு: இம்மாத முடிவு வரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்



நிறஞ்சனாஸ் சங்கானை.

அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா நடித்த

சிட்டிசன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
புதன், வியாழன் மட்டும் இரவு 8.45 காட்சி

BLACK EAGLE (கராட்டிப்படம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 5.45, 7.45

(சி-139)



ராஜா யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த

வில்லன்

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)


# இத்தாலி வேலைவாய்ப்பில் 10 வீதம் பட்டதாரிகளுக்கு

(கொழும்பு)

இத்தாலி நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக, செல்லவுள்ளோரில் 10 வீதமானவர்கள் பட்டதாரிகளாக இருப்பர் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, அமெரிக்கா, கொரியா, பிரான்ஸ் ஆகிய நாடுக ளில் இருந்து அடுத்த வருடம் பெறப் படும் வேலை வாய்ப்புக்களிலும் பட்டதாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை இட ஒதுக்கீடு மேற்கொள் ளப்படும் என்றும் அமைச்சர் எடுத்து ரைத்தார்.

இதற்காக அடுத்த வருடம் வேலைவாய்ப்புப் பணியகங்கள் மாவட்ட ரீதியில் திறந்து வைக்கப் படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடாத்தும் சமய அறிவுப் போட்டி – 2002

வலயக் கல்விப்பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே 04 பிரிவுகளைக் கொணட சமய அறிவுப்போட்டியை (எழுத்துப் பரீட்சை) பின்வரும் 07 நிலையங்களில் நடாத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

01. யா/வட இந்து மகளிர் கல்லூரி
02. யா/உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப்பாடசாலை
03. யா/இராமநாதன் கல்லூரி
04. யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
05. யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
06. யா/இந்து மகளிர் கல்லூரி
07. யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 25.12.2002ஆம் திகதி வரை பாடசாலை அதிபர்களிடமிருந் தும் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தும் ரூபா.10/- ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

*பரீட்சைத்திகதி - 29.12.2002 முற்பகல் 9.30 மணி.*

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி-223)


## இன்றைய நாள் இனிய நாள்

### 27-11-2002 - புதன்கிழமை

| | |
|---|---|
| நட்சத்திரம் | - மகம் - இரவு - 10.14 வரை. அதன் மேல் - பூரம் |
| திதி | - அபரபட்ச ஸப்தமி காலை 6.51வரை அதன்மேல் அட்டமி |
| ராகுகாலம் | - 12.12 - 1.42 |
| சுபநேரம் | - 4.42 - 6.12 |

**மேடம்** :- தேக சுகக்குறைவு, இருதய நோயாளர் சிந்தனை, உணவில் கட்டுப்பாடு தேவை, புத்திரரால் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபரம் சமநிலை.

**இடபம்** :- மாதா தேக சுகக் குறைவு, வீட்டில் செலவு, வாகனச் செலவு, வரவேணடிய பணம் தாமதமாகும், கல்விச் சமநிலை, வியாபாரச் சமநிலை.

**மிதுனம்** :- முயற்சி திருவினையாக்கும், நண்பர்கள் உறவு, இளைய சகோதர உறவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- பணவரவு குறைவு, சேமிக்கும் சிந்தனை இராது, மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**சிங்கம்** :- பணவரவு, நண்பர்கள் உறவு, மகிழ்ச்சி, கலை நிகழச்சியில் பங்கு, உடல் குளிர்ந்த உணவு, கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- கர்வநிலை உருவாதல், அதனால் மதிமயங்கிய செலவு, மனச்சஞ்சலம், கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- தெய்வ சேவை, சமயநூல் பாராயணம், சமய அறிஞர் உறவு, பணவரவு நன்று, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தொழில் ஸ்தானத்தில் மதிப்பு, தெய்வ சேவையில் மதிப்பு, மனமகிழ்ச்சி, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேக சுகக் குறைவு, வைத்தியச் செலவு, பிதாவுடன் மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகக் குறைவு, பயந்த நிலை, தேவையற்ற பிரச்சனை தேடிவருதல், தூரப்பிரயாணம் தவிர்த்தல் நன்று, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- மனமகிழ்ச்சி, வாகனப் பலன், பணவரவு, அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- நோய் நீக்கம், பகைவர்கள் மறைவு, புதிய கடன் வசதி, சுகவாழ்வு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

# அமெரிக்க தூதரகக்குழு திடீர் யாழ். விஜயம்

## - படை நிலைகளையும் பார்வையிட்டது -

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. பலாலிப் படைத்தளத்தில் இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்த இக்குழுவினர், யாழ்.குடாநாட்டு நிலைமைகள் குறித்து அறிந்து கொண்டனர். தொடர்ந்து தென்மராட்சிக்குச் சென்று பல இடங்களையும் பார்வையிட்டனர். அங்கு 53 ஆவது படையணித் தலைமையகத்தின் படை அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்புக்களிலும் இக்குழுவினர் பங்குபற்றினர்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து, யாழ்.நிலவரம் குறித்து அவர்கள் கருத்துப்பரிமாற்றம் செய்தனர். தொடர்ந்து யாழ். நகரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டனர். மாலை மீண்டும் பலாலிப் படைத் தளத்துக்குச் சென்றனர்.

மேற்படி குழுவில் - அமெரிக்கத் தூதரகத்தின் முதலாவது அரசியல் உதவியாளர் ஜெய்சன், இரண்டாவது அரசியல் உதவியாளர் பத்மினி இராஜதுரை மற்றும் பாதுகாப்புத்துறை உதவியாளர் ஒருவரும் அடங்கியிருந்தனர். (க)

### பிரபா என்ன பேசப் போகிறார் அறிவதில் அமெரிக்கர் ஆர்வம்!

(யாழ்ப்பாணம்)

இன்றைய மாவீரர் நாள் உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்ன விடயம் பற்றிப் பேசப்போகிறார் என்பது குறித்து முன்கூட்டியே அறிந்து கொள்வதில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தபோது, தாம் சந்தித்த அனேகமானவர்களிடம், பிரபாகரனின் இந்த ஆண்டு மாவீரர் நாள் உரையில் என்ன பேசப்போகிறார் என்ற கேள்வியைக் கேட்டு, அவர்கள் கூறும் பதில்களை ஆர்வத்துடன் செவிமடுத்தனர். இவர்களின் மேற்படி கேள்விக்கு பலதரப்பட்ட பதில்கள் கிடைத்தன. அனேகமானவை சமாதானப் பேச்சுப்பற்றியதாகவே அமைந்திருந்தன. (க)

### தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்திகளில், சுவர்களில், நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

வே. பிரபாகரன்

தமிழீழ தேசியத் தலைவர்

# காங்கேசன் துறைமுகமூடாக இந்தியாவிலிருந்து அகதிகள்

## - யூ.என்.எச்.சீ.ஆர் நடவடிக்கை -

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவது குறிதது ஆராயப்பட்டு வருகிறது.

காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக கடல் மார்க்கமாக அழைதது வருவதற்கும், இவ்வாறு அழைத்து வரபபடும் மக்களை அவர்களது சொநத இடங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும் தற்போதுள்ள சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அதிகாரிகள் யாழ்பபாணத்துக்கு நேற்று விஜயம் செய்தனர். யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதனுடன் இவ்வதிகாரிகள் நேற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற வடபகுதியைச் சேர்ந்த மக்களை காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக அழைத்து வருவதற்கும், ஏனையவர்களைத் திருகோணமலை துறைமுகம் ஊடாகவும் அழைத்து வருவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை, தமிழகத்திலுள்ள அகதிகள் மீளவும் தாயகத்துக்கு அழைத்து வருவது தொடர்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வனுடன் யூ.என.எச். சி.ஆர் அதிகாரிகள் குழு கடந்த வெள்ளியன்று பேச்சு நடத்தியது.

இதன் போது தமிழகத்திலுள்ள அகதிகளை உடனடியாக இங்கு அழைத்து வந்து மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு புலிகள் தரப்பில் கேட்கப்பட்டமை குறிப்பிடதக்கது.




மண்ணில் உறங்கும் மாவீரருக்கு மலர்தூவி அஞ்சலிக்கும் சிறு மலர் இவள்!

# அரசும் - புலிகளும் சமாதானத்தில் உண்மைத்தன்மையுடன் உள்ளனர்

## நோர்வே வெளியுறவு அமைச்சர் பாராட்டு

(ஒஸ்லோ)

சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் மிக உயர்ந்தபட்ச உண்மைத் தன்மையை வெளிக்காட்டி வருகின்றன. அவர்கள் துணிவுடனும், அரசியல் தலைமைத்துவத்துடனும் படிப்படியான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றனர். எனவே, உதவி வழங்கும் நாடுகள் இத்தகைய நிலைப்பாட்டினை மதித்து உதவிகளை வழங்கவேண்டும் என நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் வலியுறுத்தியுள்ளார்.

ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தொடக்கவுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அரசியல் ஆதரவையும், அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி உதவிகளுக்குத் தேவையான பொருளாதார ஆதரவையும் இலக்குகளாகக் கொண்டு இம்மாநாடு நடைபெறுகின்றது.

அமைதி முயற்சிகள் இன்னமும் விருத்தி செய்யப்படும்போது அடுத்த ஆண்டு, இதைவிடப் பாரிய உதவி வழங்கப்படும் மாநாடு நடைத்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐம்பது ஆண்டுகளாகத் தொடரும் இனப்பிரச்சினையும், இருபது ஆண்டு கால வன்செயல்களும் உடனடியாகத் தீர்வைக் கொண்டு வந்துவிடாது. தற்போதுள்ள யுத்த நிறுத்தம்-கட்டம் கட்டமான அணுகுமுறையாலேயே நடைமுறைக்கு வந்தது.

கடந்த இரண்டு தடவைகளாக நடந்த நேரடிப் பேச்சுக்களில் நம்பிக்கையூட்டும் நகர்வுகளை மேற்கொண்ட இரு தரப்பினரும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாரிய மனிதாபிமான, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளக் கவனம் கொண்டுள்ளனர். அத்துடன் கிழக்குப் பகுதியில் இனங்களிடையே ஒத்துழைப்பையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தும் தேவையையும் உணரப்பட்டுள்ளது.

ஆண்டுகள் கணக்கில் தொடர்ந்த பிரச்சினையை சில மாதங்களுள் தீர்த்துவிடமுடியாது. அதே சமயம்-நாங்கள் இரண்டு தரப்பினரையும் அங்கீகரிக்க வேண்டும்.

உள்நாட்டிலேயே இடம்பெயர்நதவர்களுக்கு உதவவும், சிறுவர்களதும் பெண்களதும் தேவைகளை நிவர்த்தி செய்யவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் என- மூன்று பிரிவுகளாக இனங்காணப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிகளைக் கையாள, வடக்கு - கிழக்கு மீள் கட்டுமான நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாங்கள் இலங்கையின் அமைதி முயர்சிகளுக்கு உதவுவதற்காக, எம்மைத் தளர்த்திக் கொண்டு, வீணான தாமதங்களைத் தவிர்த்து உதவவேண்டும். இன்றைய கூட்டம், சர்வதேசம், இலங்கையினுடன் இணைந்து அமைதி முயற்சிகளில ஈடுபடுமென்பதை தெளிவாக உணர்த்தட்டும் என்றார்.

### நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

# தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் நினைவுரை

இன்று மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக்கூடியதாக தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிகழ்வு இடம்பெறும்.

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி)**

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன் உடனடியாக 6.06 மணிக்கு அனைத்து வழிபாட்டு இடங்களிலும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுபப்படும். உயிர்காப்புப்பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி)**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும் ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்தல் வேண்டும்.

**ஈகச்சுடரேற்றல் (6.07 மணி)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும். (மாவீரர்களின் பெற்றோர்கள், அவரவர் சுடரேற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால் மாலை 5.45 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்)

மாவீரர் துயிலுமில்லங்களில் உள்ள மாவீரர் கல்லறைகள், நினைவுகற்களுக்கு, முன்னால் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர், அதேநேரம் மாவீரர் துயிலும் இல்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற்றோர்கள், அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவைதவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்கள், பொது இடங்கள், அலுவலகங்கள், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடரேற்றுவர். ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும். (மாவீரர் ஈகச்சுடரேற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாது, வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறுவகையில் ஒளி உ/ந வாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.)

தமிழீழ மாவீரர் பணிமனை.

# முல்லைத்தீவில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(முல்லைத்தீவு)

இரண்டு தசாப்த காலமாக நடைபெற்ற யுத்தத்தின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெறறோர்களை கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு முல்லைத்தீவு புனர்வாழ்வு கழகத்தின் தலைவர் மரியதாஸ் தலைமை வகித்தார். கடற்புலிகளின் மகளிர்படைப் பிரிவு விசேட தளபதி ஜெரோமினி தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். முல்லை மாவட்ட கடற்புலிகளின் தளபதி ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் சகிலா வரவேற்புரையை நிகழ்த்தினார். முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மலரவன், முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ஜெயநாதன் மற்றும் கடற்புலிகளின் அரசியற்துறையினைச் சேர்ந்த விநாயகம், தளபதி கேணல் சொர்ணம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

அதன் பின்னர் மூத்த தளபதிகள் பொட்டம்மான், சொர்ணம் ஆகியோர் மாவீரர்களின் பெற்றோருடன் கலந்துரையாடினர்.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.35 |
| லுஹர் | 12.29 |
| அஸர் | 3.51 |
| மஃரிப் | 6.21 |
| இஷா | 7.35 |

# செயற்கைமுறை தாவர உற்பத்தி விரைவில் யாழ்ப்பாணத்திலும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் செயற்கை முறையில் தாவரங்களை உருவாக்குவதற்காக இழையவளர்ப்பு மையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இம் மையத்தில் செயற்கை முறையில் புதிய இழையத்தாவரங்கள் பலவற்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி இழையவளர்ப்பு மையத்தினை உருவாக்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இந்த நிதி உதவியைப் பயன்படுத்தி மிகவிரைவில் யாழ்ப்பாணத்தில் இழைய வளர்ப்பு மையம் ஒன்றை உருவாக்குவதற்கு யாழ்.பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்து வருகிறது.

இவ்இழைய வளர்ப்பு மையத்தின் மூலம் குடாநாட்டின் விவசாயத் துறையில் அதிசயிக்கத்தக்க வகையில் பல முன்னேற்றங்களை எட்ட முடியும் என்றும் பல புதிய இனத்தாவரங்களை உருவாக்க முடியும் என்றும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரை தெரிவித்தார். குறிப்பாக புதிய முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்ட வாழை இனங்களை விரைவில் உருவாக்கிக் கொள்வதற்கு முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க,ச)

## மாவீரர் நினைவாக கடலில் ஈகச் சுடர்

மாவீரர் தின இறுதி நாளான இன்று கடற்புலிகளினதும், கடற்கரும்புலிகளினதும், சிறப்புப் படையணிகளின் அணிநடை முல்லைநகர் மத்தியில் இடம்பெற்று, கடலிலே காவியமான மாவீரர்களை நினைவு கூர்ந்து கடலில் ஈகச் சுடர் ஏற்றும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

## அறிக்கை சமர்ப்பிப்பு

அரசாங்க சேவை தாதிமார்களின் சமபள முரண்பாடுகள் சம்பந்தமான உப குழுவின் அறிக்கை சமாதான அமைச்சிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

உபகுழுவின் தலைவர் எம்.எம். யுனைட் கருத்துத்தெரிவிக்கையில்:-

இந்த அறிக்கையை அமைச்சர்கள் அங்கீகரித்ததும் உடனடியாக அது அமுலாக்கப்படும் என்று தெரிவித்தார்.

## கட்டைவேலியில் மாவீரர் தின நிகழ்வுகள்

(கட்டைவேலி)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் மாவீரர் எழுச்சி நாள் நேற்று திங்கட்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மேற்படி எழுச்சிநாள் நிகழ்வு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றது. கொடிக்கீதம் இசைக்க இயக்குநர் வீ.நடராசா தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

சங்க ஊழியர்கள், இயக்குநர்கள் கலந்துகொண்டு எழுச்சி நாளை நினைவு கூர்ந்து ஒவ்வொருவரும் மலர்தூவி வணக்கம் செய்தார்கள். மலர் வணக்கத்தை தொடர்ந்து நினைவுரை இடம்பெற்றது.

மாவீரர் நாளின் மகிமை பற்றிய நினைவுரைகள் - செ.கெங்காதரன், பு.இராதாகிருஷ்ணன், வ.காந்திமதிநாதன், வே.கார்த்திகேசு, தணிகாசலபதி, நடேசன் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டன.

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

(கொழும்புத்துறை)

கட்டுத்துவக்கு வெடித்துப் படுகாயமடைந்த நிலையில் வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டைச் சேர்ந்த சின்னச்சாமி கிட்னசாமி (வயது 38) என்பவர் அக்கராயான் வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கால்களில் பலத்த காயமடைந்த நிலையில் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் - ஒருவர் கட்டுத்துவக்கு வெடித்ததனால் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (60)

## ஆங்கில விருத்திக் கழகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில கல்வியை விருத்தி செய்ய ஆங்கில மொழித்திறன் அபிவிருத்தி கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பழைய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ் விசேட 'வகுப்புக்களை நடாத்துவதற்கான ஆசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. (ச)

# கடற்றொழிற் சங்க உபதலைவர் படையினரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீனவர் ஒருவரை படையினர் நேற்றுமுன்தினம் கடுமையாகத்தாக்கியுள்ளனர்.

குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்க உபதலைவரான சே.அருள்சீலன் என்ற குருநகர் மீனவரையே நேற்று மதியம் குருநகர் இறங்கு துறையில் வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

நேற்று மதியம் 2 மணியளவில் படகு நிறுத்துவதற்காகக் கடலுக்குச சென்று கொண்டிருந்தபோது, படையினர் மேற்படி நபரை அழைத்து சிங்களத்தினால் உரையாடி இருக்கின்றனர். மேற்படி நபர் தனக்குச் சிங்களம் தெரியாதெனச் கூறிவிட்டுச சென்றுகொண்டிருந்த வேளை, படையினர் அழைத்து இவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திலும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி சந்திரசேகரா, சம்பவ இடத்திற்குச் சென்று மேற்படி மீனவரைச் சந்தித்ததுடன், வடமாகாண மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணத்துடனும் கலந்துரையாடியுள்ளார். (லி)

# படகில் வந்த ஈ.பி.டி.பியினர் இறங்க மக்கள் தடை

## பொருட்களை மட்டும் இறக்க அனுமதி

(நெடுந்தீவு)

நேற்றுக்காலை பொலிசாருக்கான சில பொருட்களுடன் நெடுந்தீவில் இறங்கவந்த ஈ.பி.டி.பியினர் இறங்குதுறையில் நின்ற பொது மக்களால் திருப்பியனுப்பப்பட்டனர். பொருட்களை மட்டும் இறக்க அனுமதிக்கப்பட்டது.

இதேசமயம், நேற்றுமுன்தினம் அமைச்சர் மகேஸ்வரனால் நெடுந்தீவு மக்களுக்கென வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் படகுச்சேவையின்மையால் நேற்று அங்கு எடுத்துச்செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. (112)


எம் மண்ணிற்காக எம் இனத்திற்காக
எம் தேசத்திற்காக தம்மைத் தாமே
ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்
பரந்தாமன்
நல்லூர்.
(சி-222)

வைஷ்ணவி நகைப்பூங்கா
VYSNAVI NAGAI POONGA
எமது தேசத்திற்காகத் தம்மைத் தாமே
அர்ப்பணித்துக்கொண்ட உத்தமர்களுக்கு
எமது இதய அஞ்சலி.
பிரதான வீதி,
நெல்லியடி.
(சி/217)

விழியுதிரும் கண்ணீர்-வேங்கைகள் திருவடிக்கு
செழிப்புடன் தமிழீழம்
பசுமையுடன் தினம் ஒளிரக்
களிப்படையும் மாவீரர் உள்ளக் கனவுகளாம்
ஒளி விளக்கேற்றி மாவீரர் தாள் பணிவோம்

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்
மொத்த சில்லறை விநியோகஸ்தர்கள்
வீரவாகு கட்டடம்,
பருத்தித்துறை.
(சி-197)

K.K.Ratnam
MARKET,
POINT PEDRO.
எழுந்தாலும் நன்மைக்காக; வீழ்ந்தாலும்
நன்மைக்காக என்னும் கொள்கையை நிலை
நாட்டிய ஈழத்தின் மாவீரர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்!

கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்
மாவீரர் நாள் நவம்பர் 27
எமது மண்ணின் விடிவுக்காக தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களை நினைவில் நிறுத்தி அஞ்சலி
செலுத்துகின்றோம்.
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் பரந்த
சேவை:
01) நுகர்ச்சிச் சேவை
02) வாடகை சேவை
03) கலாசார முயற்சிகள்
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.
கரவெட்டி.
(சி-220)

மாவீரர்களுக்கு
எமது
இதய அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.
சிவராஜ் வியாபாரக் கம்பனி
163, பிரதான வீதி,
பருத்தித்துறை.
(சி-205)

1936 இலிருந்து சிறந்த சேவை
✷ தெளிவு ✷ விரைவு ✷ அனுபவம்
ஈழத்தின் விடிவிற்காய் ஈரமண்ணில் உரமாகிப் போன
உறவுகளுக்கு எமது அஞ்சலிகள்!
Kodak MINI LAB
குகன் ஸ்ருடியோ கலர் லாப்
பருத்தித்துறை.
(சி/218)

E.R.A. ஓடியோ அன்ட் வீடியோ
பிரதான வீதி,
பருத்தித்துறை.
ஓடியோ CD மூலம் நேரடி ஒலிப்பதிவு,
ஆங்கில, தமிழ் வீடியோ CD,
படப்பிரதிகள் வாடகைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்.
இந்த மண்ணின் விடுதலைக்காக
பந்தபாசங்களைத் துறந்து
இலட்சிய வழி நின்ற இலட்சிய வாதிகள்
அவர்களின் கனவுகள்
இன்று நனவாகின்றன.
(சி/319)

தற்கொடையாகி தமிழீழ வித்தாகி
நினைவுகளில் என்றும் தொடர்ந்துவரும்
மாவீரர்

பொற்பதத்தைப் போற்றி வழிபடுவோம் வாருங்கள்
பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்
முதலாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.
– தலைவர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.
(சி-210)



வெம்புலியாய் வந்துதமிழ்
ஈழ விடுதலைக்கு
தம்மைப் படைத்த
மாவீரர் தாள் பணிந்து
சுட்டி விளக்கடியில் வீர வணக்கம் செய்திடுவோம்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி, கரவெட்டி.
(சி-209)

# தமிழீழ மாவீரர் நாள் நவம்பர் 27



## தாயக வேள்வியில் ஆகுதியானவர்களுக்கு தலைவணங்குகின்றோம்!




**பருத்தித்துறை நகர கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

**சிந்தாமணி விநாயகர் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
கரவெட்டி.

**பொலிகண்டி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
ஆலடி,
பொலிகண்டி.

**வல்வெட்டித்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
வல்வெட்டித்துறை.

**பொலிகண்டி மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை.

**கெருடாவில் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
கெருடாவில்,
தொண்டமாறு.


## தமிழின விடுதலைக்காய் வித்தாகிய மாவீரர்கள் என்றும் போற்றுதற்குரியோர்!

கார்த்திகை இருபத்தேழு என்பதும் தமிழர் நெஞ்சத்தில் மாவீரர் நாள் நினைவில் வந்துவிடும். மாவீரர் நாள், நடுகல் வழிபாட்டுக்குரிய புனித நாள். பண்டைய தமிழரின் வாழவும் வழிபாடும் பற்றி அறிவியல்ரீதியாக ஆராய்வோமானால், நடுகல் வழிபாடு வீரர்களை நினைவு கொள்வதாக அமையும். நடுகல் வழிபாட்டைத தவிர இடையில் புகுந்து கொண்ட ஏனைய வழிபாட்டு முறைகள் வெறும் மாயையினை தோற்றுவிப்பதென்பதே மெய்யாகும். அறிவியல் ரீதியான சிந்தனை மேன்மை கொண்டதான வழிபாட்டு முறையையே தமிழினம் தொன்மையான காலத்தில் வழக்கப் படுத்திக் கொண்டு வந்தது.



தைப்பொங்கல் கொண்டாடி உழவுக்கு உதவி தந்த சூரியனுக்கு தமிழர்கள் நன்றி மறக்காமல் விழா எடுக்கின்றனர். சூரியனிற்கே நன்றி என்றால்... தம்மையே எமக்குத் தந்த மாவீரர்களுக்கு? சூரியன் ஒளிக்கதிரையே எமக்குத் தந்தான். மாவீரர்கள் அப்படியல்லவே. அவர்களே நினைத்து யாருமே அழுத தேவையிலலை... அவர்கள வணாகிப போனவர்க[...]அலலா. விததாகிப போனவர்கள. விததுககளுககு என்றுமே அழிவில்லை... அழிவில்லா வித்துக்களை எணணி ஏன அழவேணடும. அவர்கள விடடுச சென்ற பணிகளை முன்னெடுக்க நாம் முனைய வேண்டும்.

தமிழினம் பட்ட இன்னல்களையெல்லாம் தகர்த்தெறிந்த தவபபுதலவர்களும, புதலவிகளும என்றென்றும [...]மைத் தன்னோடு அணைத்து வைத்திருக்கும் மண்ணோடு சேர்ந்து கொண்டவர்கள்.

தேசததின விடுதலைககு விததானவர்கள நேசததிற குரியவர்கள. இனததின கௌரவததையும, மானததையும் காத்து விடுதலையை பெற்றுத்தர அவர்கள் தந்ததைத் தவிர.... அதை விஞ்சியதாய் வேறு எவரால் எதைத் தரமுடியும்?

எதிரிகள எமமினததை அழிததொழிகக நிமிர்நது நின்றார்கள். எங்களைக் காப்பாற்றுவது யாரென்று மக்கள் ஏஙகி நினறார்கள. இநத வேளையில எமது போராளிகள் மக்களைக் காக்கும் கவசமாக உருவெடுத்தார்கள். அந்த உருவாக்கத்தின் முடிவாய் அவர்கள் எமக்காக விதையானார்கள. மாவரர் பறறி தலைவர் கூறுகையில,

"மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது" என்பது வரலாற்றின் வாக்கு.

முன்னேறி வந்த போராட்டத்திற்கு உரமேற்றியவர்கள் மாவீரர்கள் என்பதை தலைவர் கூறியவற்றிலிருந்து முழுமையாக விளங்கிக்கொள்ள முடியும். எம்மைக் காக்கத் தம்மையே தந்துவிட்டுப்போன மாவீரர்களை வெறுமனே வாழ்த்தினால் போதாது. மக்களின் வாழ்விற்காய், தம்மையே அர்ப்பணித்து, மாவீரர்களாய் துயில்கொள்ளும் அவர்களுக்காக மலர்தூவி வணங்க மூன்று நாள் போதாது. எம் தேசத்தின் உயிருள்ளவரை எம் உணர்வுகளின் ஆன்மா உயிருள்ளவரை மாவீரர் புகழ் நிற்கும்! நிலைக்கும்!!

17,648 மாவீரர்களினதும் உன்னத தியாகத்தினால் தான் இன்று இந்த அமைதியான சூழ்நிலை உருவாகியுள்ளது. நாங்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகத் தங்களது வாழ்வை, தங்களது விருப்புக்களை, தங்களது எண்ணங்களை - தாய் மண்ணிற்காகவே தநதவாகளின தியாகநதான இனறு நாஙகள தலைநிமிர்ந்து நிற்கக் காரணம்.

அவர்களால் உருவான அமைதியான சூழ்நிலையில் அவர்களுக்காக எம்மினம் மலர்தூவி வணங்கவேண்டிய நாள இனறு. நாம உரிமைகளைப பெறறு சுதநதிரமாக வாழ வேண்டும் என்பதற்காக... துணிவோடு களமாடி, எதிரி யைத் திணறவைத்து எம் விடுதலையை உலகறிச் செய்தவர்களே மாவீரர்கள்.

ஒவ்வொரு மாவீரர்களின் வரலாறும் நாம் அனுபவிக்கும சுதநதிரததிறகாக அவர்கள செயத தியாகததின கதை சொல்லும். அவை எம்மால் என்றென்றும் நினைவில இருததிப பூசிகக வேணடிய காவியஙகள.

தாயையும், தாய் மொழியையும், தாய் மண்ணையும் அடிமைபபடுதத விடோமென்று... புறபபடடவர்கள இனறு தாயமணணிலே விதையாகித துயிலகின்றனா. என்றென்றும எநதவேளையிலும எமமை ஏநதிச சுமககும தாய மணணோடு சேர்நது எமககாக உயிர் தநதவர்கள எமமை ஏநதி நிறகினறார்கள. அவாகள நினைவில இனறு நாம் எமது இலக்கு நோக்கி உறுதிசெய்து கொள்வோம்.

*- கனகரவி.*

## மாவீரரே! எங்கள் மாண்புமிகு தியாகிகளே!!
### சுடரேற்றி நும்பாதம் பணிகின்றோம்!

மாவீரரே! எங்கள் மாண்புமிகு தியாகிகளே!
மாநிலத்தில் உயர்ந்து நிற்கும் புனிதர்களே!
தெய்வீகம் மேவியதால் தேவர்கள் ஆனீரே
சீலர்களே! சுடரேற்றி நும்பாதம் பணிகின்றோம்.

சுதந்திர தீபத்தை ஏற்றிடச் சென்றீர்
குருதியைப் பாய்ச்சி வளர்ந்திடச் செய்தீர்
அதிசயப் பிறவிகள் ஆகியே மறைந்தீர்
அணையாச் சோதியாய் ஒளிருகின்றீரே

அன்னையும் தந்தையும் அணைத்து வளர்த்தும்
அன்னவர் பாசமும் இறுகவேயில்லை
மன்னவன் ஆணையைச் சிந்தையில் சுமந்தீர்
இன்னுயிர் ஈந்து தேவர்களானீர்.

வாலிபம் வளரவும் குடும்பப் பாசமும் அகன்றது
தேசம்முன் னின்றது தெய்வீகம் வென்றது
சுதந்திர ஈழமே இலட்சியமானது
அதிரடி மேவியே அவனியில் உயர்ந்தீர்.

கன்னியர் கற்பினை கவர்ந்துயி ரழிக்கும்
கசடர்கள் பாசறை நெருங்கியப் பொழுதினில்
மின்ன லிடித்தெனக் குண்டுடைத் தழித்தீர்
மேதினி தொழுதிடும் தேவர்க ளானீர்.

- மாரீசன்.

## உங்கள் நினைவுகள்...

உங்கள் நினைவுகள்...
நீண்டதொரு பயணத்தின்
பாதைப் பரப்புகளில்....
உங்கள் செந்நீரின் உருகுதல்கள்-
காலங்காலமாய் கருத்தரிக்கிறது...
காற்றில் கடலில்
ஊற்றில் உணர்வில்
தேற்றுவாரின்றிய தேம்பல்களாய்.
உங்கள் நினைவுகள் உயிர்வாழ்கிறது...
ஆன்மாவின் சுவாசங்களாய்.
அக்கினி பெருமூச்சுக்களாய்
உயிரின் அடிநாதங்காய்-
உலாப்போவது உங்கள் கனவுகள்தான்-
இலக்கு நோக்கிய சிகரங்களாய்
வரிசைப்படுத்தப்பட்ட - உங்கள்
தியாகங்களின் பரிணாமம்
காலத்தை வென்ற...
காவிய கீதமாய்....
தேசத்தின் திசைகளில் என்றும் வாழும்.

ப.யாழினி

# மாவீரர் நாள் - 2002 நவம்பர் 27



தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

நெஞ்சினில் நெருப்பேற்றி
நிலம் மீட்கச் சென்றோரின்
நினைவோடு விளக்கேற்றி
நிற்கின்றோம் பணிகின்றோம்.

காற்றோடு காற்றாகி
கனலாகி ஒளிர்ந்தோரின்
ஆற்றலினை உள்வாங்கி
அவர் உறுதிதனை ஏற்றோம்.

கல்லறைக்குள் துயில்வோரின்
சொல்லெமக்குக் கேட்கிறது
வெல்வதற்கு வழி வகுத்தீர்
வென்றெடுப்போம் உம் கனவை.

தாயகத்தின் தாகத்தால்
தவிக்கின்ற உம் நாவால்
தமிழீழ விடுதலையின்
பாடலை நாம் பாட வைப்போம்.

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-194)

கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணதர)
மாதிரி வினாத்தாள் - 2002

# கணிதம் I



# மாணவர் மலர்

01) ஒரு போத்தல் 750 ml ஆயின் 4.5 l எத்தனை போத்தல் எனக் காண்க?

02) 375,625 இன் பொதுக் காரணிகளில் பெரியதைக் காண்க?

03) $\frac{2x+1}{7} = \frac{1}{4}$ இல் x இன் பெறுமானத்தைக் காண்க?

04) $78^2 - 22^2$ என்பதைக் காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானங் காண்க?

05) $(16)^{2.5} \times (25)^{-3/2}$ இன் பெறுமானத்தை அறிக?

06)




உருவில் 30m நீளமும் 20m அகலமும் உடையது. அதனைச் சுற்றி 1m அகலமான பாதையுண்டு. பாதையின் பரப்பு யாது?

07) $x^2-4=0$ இன் மூலங்களைக் காண்க?

08) குறித்த முதல் 2 வருடங்களில் அதன் இருமடங்கான தொகையைத் தருவதற்கான வட்டி வீதம் யாது?

09) $\frac{2x+1}{(x-1)} - \frac{x}{(x-1)^2}$ ஐச்சுருக்குக?

10) ஒரு பல்கோணியின் அகக்கோணம் $150^0$ ஆயின் அதன் பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க?

11) $a^2+b^2=20$ ஆகவும், ab=8 ஆகவும் இருப்பின் (a+b) இன் பெறுமானங்காண்க?

12)




உருவில் BC=5cm, CA=6cm, AB=7cm ஆயின் முக்கோணி xyz இன் சுற்றளவுயாது?

13) ஒரு பெட்டியிலுள்ள பழங்களில் ஒன்றை எழுமாறாகத் தெரிவுசெய்தால் அது அழுகியதாக இருப்பதற்கான நிகழ்தகவு 20% ஆகும். நல்லது கிடைக்கும் என எதிர்பார்க்கும் நிகழ்தகவு யாது?

14)




உருவில் வட்டத்தின் ஆரை 12.5cm ஆகும். AC=12cm ஆயின் BCயின் நீளம் யாது?

15)




உருவில் x,y,z, ஐ காண்க?

16) ஒரு முக்கோணியின் புறக்கோணங்கள் $x^0, (x-40)^0, (x+10)^0$ ஆயின் x ன் பெறுமானம் யாது?

17) $\sqrt{17} = 4.123$ ஆயின் $\sqrt{0.000017}$ இன் பெறுமானம் யாது?

18) $2மட_{10}x + மட_{10}4 = 2$ ஆயின் X ஐக் காண்க?

19) ஒரு வீட்டின் ஆண்டுப் பெறுமானம் ரூ 40000 ஆகும். இவ்வீட்டிற்கு காலாண்டு வரி ரூ 50 ஆயின் வரி நூற்றுவீதம் யாது?

20) மாடி ஒன்றின் அடியிலிருந்து 40m தூரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து உச்சியின் ஏற்றக் கோணம் $60^0$ ஆயின் அதன் உயரம் யாது?

21)




வட்டத்தின் மையம் o ஆகும். AB=CD எனக் காட்டுக?

22) x,2x,(4x-2) என்பன கூட்டல் விருத்தியில் அமைந்தால் x ன் பெறுமதி யாது?

23) $\frac{\sqrt{4a-c}}{b} = \frac{c}{e}$ இல் a யை எழுவாயாக்குக

24)




உருவில் நிழற்றிய பிரதேசத்தை தொடைக்குறியீட்டில் தருக?

25) $4^x \times 2 = 8^{1/3}$ எனின் xன் பெறுமதி யாது?

26) நீளம் அகலத்தைப் போல் 5 மடங்காக உள்ள ஓர் செவ்வகத்தின் பரப்பு $80m^2$ ஆயின் அதன் நீளம் யாது?

27) $\frac{2-1.08}{0.07+0.13}$ ஐச் சுருக்குக?

28) 12 மனிதர் 5 நாட்களில் 2 மணித்தியாலப்படி செய்யும் வேலையை 6 மனிதர் 2 நாட்களில் முடிக்க எத்தனை மணித்தியாலப்படி வேலை செய்ய வேண்டும் எனக் காண்க?

29) A:C=4:3, B:C=1:5 ஆயின் A:B:C இன்பெறுமானம் யாது?

30) 2x+3y=7 என்ற நேர்கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு யாது?

எஸ்.எஸ்.கண்ணன்



## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சை - 2002 (மாதிரி வினாத்தாள்)



### விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் -I

1) அடர்த்தியின் சர்வதேச அலகு யாது?
   1) $Kg\ cm^2$ 2) $Kgm^{-3}$ 3) $Nm^{-2}$ 4) $Nm^3$

2) பின்வரும் தாவரங்களில் எதில் உணவு சேமிப்பு உறுப்பாகத் தொழிற்படும் நிலக்கீழ்த்தண்டினை உண்டாக்குவதில்லை.
   1) வெங்காயம் 2) இஞ்சி 3) உருளைக்கிழங்கு 4) மரவள்ளி

3) பின்வருவனவற்றுள் எது கூர்ப்பு நிகழக் குறைந்தளவு செல்வாக்கையுடையதாக இருக்கும்
   1) விகாரம் 2) விகாரத்தின் தலைமுறையுரிமை
   3) தன்மயமாக்கல் 4) சூழல்நிபந்தனைகளின் பொருட்டான இசைவாக்கம்

4) இரும்புத்தாது என்பது யாது?
   1) இரும்பு சல்பைட்டு 2) இரும்பு ஒட்சைட்
   3) இரும்பு காபனேற்று 4) இரும்பு

5) திரவப்பெற்றோலிய வாயுவில் அதிகம் அடங்கியுள்ள வாயு எது?
   1) $C_3H_8$ 2) $C_4H_{10}$ 3) $CH_4$ 4) $C_2H_6$

6) மண்ணுக்கு நைத்திரேற்று கிடைக்காத சந்தர்ப்பம்
   1) மின்னல் 2) நைதரசன் இறக்கும் பக்றீறியாக்கள்
   3) நைசோபியம் பக்றீறியா 4) ஒளித்தொகுப்பு

7) றப்பர் திரட்சி நிரோதியாகப் பயன்படுத்த முடியாத பதார்த்தம் எது.
   1) சோடியம் சல்பைட்டு 2) சோடியம் காபனேற்று
   3) அமோனியா 4) யூறியா

8) ஒரு சுரத்தின் சுருதியை அதிகரிப்பதற்காக
   1) அதிர்வுகளின் மீடிறனைக் குறைக்க வேண்டும்
   2) அதிர்வுகளின் மீடிறனை கூட்டுதல் வேண்டும்
   3) வீச்சத்தைக் குறைத்தல் வேண்டும்.
   4) வீச்சத்தை அதிகரித்தல் வேண்டும்.

8 ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

க.பொ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் எமது மாணவ மணிகள் பரீட்சையில் சித்திபெற்று உயர்கல்வியைத் தொடர "நமது ஈழநாடு – மாணவர் மலர்" தனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

9) பின்வருவனவற்றுள் எது சேர்வை அல்லாதது
1) கொண்டிசு 2) துரிசு 3) கல்சியம் 4) ஐதரசன் பரஒட்சைட்

10) பின்வருவனவற்றுள் எது இரசாயனத் தாக்கம் ஒன்றைக் குறிக்கும்.
1) ஒட்சிசன் நீரில் கரைதல் 2) $CO_2$ நீரில் கரைதல்
3) $C_6H_{12}O_6$ நீரில் கரைதல் 4) பனிக்கட்டி உருகுதல்

11) ஒரு குவிவாடியில் படும் ஒளிக்கதிரின் பாதையைச் சரியாகக் காட்டும் படம் பின்வருவனவற்றுள் எது?



12) குருதியில் வெண்குழியங்களின் எண்ணிக்கை அசாதாரணமாக அதிகரிக்கும் நோய்
1) முடியுருதுரொம்போசிஸ் 2) குருதிச்சோகை
3) குருதிப்புற்றுநோய் 4) மூளையத்தடுக்கை

13) 


படத்தில் AO என்ற ஒளிக்கதிர் நீரில் இருந்து வளிக்கு செல்வதை படம் காட்டுகிறது. அவ் ஒளிக்கதிர் தொடர்ந்து செல்லும் பாதை யாது?
1) OB 2) OC 3) OD 4) OE

14) $40^0c$ யில் உள்ள 1l நீரினுள் $100^0c$ இல் உள்ள 2l நீர் ஊற்றப்பட்டால் இறுதி வெப்ப நிலை யாது?
1) $50^0c$ 2) $60^0c$ 3) $70^0c$ 4) $80^0c$

15) இறப்பர் பாலில் இறப்பரின் சதவீதம் யாது?
1) 80% - 90% 2) 30% - 40% 3) 50% - 60% 4) கூறமுடியாது

16) திரான்சிஸ்றரில் விரிவாக்கப்பட்ட ஒலியாக வெளிவிட உதவுவது.
1) நுணுக்குப்பன்னி 2) செவிப்பன்னி 3) கொள்ளளவி 4) ஒலிபெருக்கி

17) பின்வருவனவற்றுள் எதற்கு அலகு காணப்படுவதில்லை
1) வலு, மின்கணியம் 2) அயனாக்கற்சக்தி, உராய்வு விசை
3) பொறிமுறைநயம், வேகவிகிதம் 4) தடை, மின்னோட்டம்.

18) AIDS நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரின் உடலில் எத்தொழிற்பாடு பாதிக்கப்படும்
1) சுவாசத்தொழிற்பாடு 2) கழிவுத்தொழிற்பாடு
3) நோய் எதிர்ப்புத் தொழிற்பாடு 4) உணவு சமிபாட்டுத் தொழிற்பாடு

19) குருதியானது பின்வரும் எவ் அங்கத்தின் ஊடாகப் பாயும்போது குருதியில் யூறியா செறிவு அதிகரிக்கும்.
1) ஈரல் 2) சிறுநீரகம் 3) தசை 4) இரைப்பை

20) இறப்பரின் கறையை போக்கப் பயன்படும் பதார்த்தம் யாது?
1) சோடியம் இருசல்பைட் 2) சோடியம் காபனேற்று
3) அமோனியா 4) சோடியம் சல்பைட்

21) அங்கிகளில் புதிய இனங்கள் உண்டாவது.
1) விகாங்கள் உண்டாவதாலாகும்
2) விகாரங்கள் தலைமுறையுரிமை பெறுவதாலாகும்
3) வாழ்க்கைப் போட்டி காரணமாக.
4) தலைமுறை உரிமை பெற்ற விகாரங்கள் இயற்கைத் தேர்வுக்குட்படுவதாலாகும்.

22) 

சாய்வான மேசை ஒன்றின் மீது ஒரு மரக்குற்றி வைக்கப்பட்டுள்ளது அதன் நிறையும் செவ்வன் மறுதாக்கத்தையும் குறிக்கும் கோடுகள் முறையே
1) A,B 2) A,C 3) D, C 4) C,A

23) அவரைக்குடும்பத்திற்குரிய பயிர்கள் பசும் பசளையாகப் பயிரிடுவதற்கு மிக உகந்தவையாக இருப்பதற்குக் காரணம்.
1) அவை ஏராளமான இலைகளைக் கொண்டிருத்தல்
2) அவை நோய், பீடை ஆகியவற்றில் தாக்கப்படாதது.
3) அவற்றிற்கு வளமாக்கிகள் தேவைப்படாமை.
4) அவை வளிமண்டல நைதரசனை நாட்டக் கூடியவையாக இருத்தல்.

24) குறியீடுகள் A, B, C என்பன குறிப்பவை முறையே




1) ஒடுக்கி, இருவாயி, திரான்சிஸ்றர்
2) மாறும் ஒடுக்கி, ஒளிகாலம் இருவாயி, இருவாய்.
3) மாறும் ஒடுக்கி, இருவாயி, திரான்சிஸ்றர்.
4) மாறும் தடை, ஒடுக்கி, இருவாயி.

25) பின்வருவனவற்றில் எதில் தாக்கிகளின் திணிவு, விளைவுகளின் திணிவிற்கு சமன் அல்ல.
1) $Mg(OH)_2 + 2Hcl \rightarrow Mgcl_2 + 2H_20$
2) $CaC0_3 \rightarrow Ca0 + C0_2$
3) $Zn + 0_2 \rightarrow 2Zn0$
4) $2Fe + O_2 \rightarrow 2Fe0$

26) படத்தில் காட்டப்பட்டுள்ள கப்பிகள் உராய்வு அற்றவை. இலேசானவையாகும். P யினாற் குறிக்கப்படும் விசையின் இழிவுப்பெறுமானம் யாது?




1) 300N 2) 30N 3) 100N 4) 10N

27) காடழித்தலின் தீமைகள் அல்லாதது எது?
1) விலங்களுக்குப் புகலிடம் இல்லாது போகும்
2) மழைவீழ்ச்சி பாதிக்கப்படும்
3) நிலம் வளமான மண்ணைக் கொண்டிராது.
4) மழைவீழ்ச்சி பாதிக்கப்படாமை.

28) எதிரொலி உண்டாகத் தேவையான நிபந்தனைகள்.
1) பட்டுத்தெறிக்க ஒழுங்கான மேற்பரப்பு
2) ஒலி கேட்கக் கூடியளவு உரப்பாயிருத்தல்.
3) 17 mஐ விடக்கூடியளவு தூரம் சென்று மீண்டும் வரும்
4) மேற்கூறிய யாவும் சரி.

29) சிறுநீரகக் கற்களை உடைக்கப் பயன்படுவது எது.
1) எதிரொலி 2) கழியொலி 3) கழியூதாக்கதிர்கள் 4) சூரியஒளி

30) நெல் முளைக்கும்போது எதனை அவதானிக்க முடியாது?
1) வெப்பம் உண்டாதல்
2) நெல்பருத்தல்
3) முளைத்தண்டின் முன்முளைவேர் வளருதல்
4) முளைவேரின் முன் முளைத்தண்டு வளருதல்

31) 


விற்றராசு ஒன்றில் கட்டித் தொங்கவிடப்பட்ட உலோகக்குற்றி நீரில் இருக்கும்போது, அதன் ஆரம்பநிலையை படம் காட்டுகிறது. இந்நிலையில் இருந்து குற்றி வெளியே எடுக்கப்பட்டது அப்போது விற்றராசின் வாசிப்பில் மாற்றம் ஏற்படாமல் விற்றராசின் வாசிப்புக்கும் அதன் நிலைக்கும் ஒரு வரைபு வரைந்தால் பின்வரும் எவ்வரைபு அதைக் குறிக்கும்.




32) பிரசாரணம் என்னும் தோற்றப்பாடு பின்வருவனவற்றுள் எதனோடு சம்மந்தப்பட்டது
1) குளிர்சாதனப்பெட்டியில் மீனை வைத்தல்
2) பழப்பாகுவில் பூஞ்சணம் உறையாமை
3) கடல்நீர் மீன்கள் நன்னீரில் விட்டால் இறந்துவிடுதல்
4) வாடிய தாவரங்களுக்கு நீர் ஊற்றியவுடன் வாட்டம் தெளிவடைதல்

33) ஒளித்தொகுப்பிற்கு வேண்டிய நிபந்தனைகளுக்குப் பரிசோதனை செய்து வாய்ப்புப் பார்க்கிறோம். ஆனால் நீர் அவசியமானதா என பரிசோதித்துப் பார்ப்பதில்லை. இதற்கான சிறந்த காரணம்?
1) மாப்பொருள் தயாரிக்க நீர் இன்றியமையாதது.
2) இலைகளில் இருந்து மாப்பொருள் மற்றைய பகுதிக்கு கடத்தப்படுகிறது.
3) கட்டுப்பாட்டுப பரிசோதனையை அமைக்க முடியாது.
4) நீர் நீராவியாக வளியில் உண்டு.

34) பின்வரும் பதார்த்தங்களில் எது C,H மூலகங்களை மட்டும் கொண்டது.
1) தேங்காய் நெய் 2) டீசல் 3) நல்லெண்ணெய் 4) ஒலிவ்நெய்

35) ஆரோக்கியமான ஒருவரின் ஒரு கனமில்லிமீற்றர் குருதியினுள் அடங்கியுள்ள குளுக்கோசின் அளவு.
1) 10g 2) 60g 3) 70mg 4)90mg

36) சோடியம் காபனேற்றின் ($Na_2C0_3$) சார் மூலக்கூற்றுத் திணிவு 106 ஆகும். 0.5M சோடியம் காபனேற்றுக் கரைசலொன்றினைத் தயாரிக்கக்கூடிய திருத்தமான முறை- 53g சோடியம் காபனேற்றை,
1) 500 ml நீரில் கரைதல் ஆகும்
2) கரைசலின் கனவளவு 500 ml ஆகும் வண்ணம் நீரில் கரைத்தல்.
3) 1000 ml நீரில் கரைத்தலாகும்
4) கரைசலின் கனவளவு 1000 ml ஆகும் வண்ணம் நீரில் கரைத்தலாகும்.

37) பின்வருவனவற்றில் எதற்குக் குறைந்த எரிபற்று நிலை உண்டு.
1) மண்ணெண்ணெய் 2) தேங்காயெண்ணெய்
3) பெற்றோல் 4) பரவின் மெழுகு.

38) எதைக் குளோரைட் மூலக்கூறுகளின் பல்குதியாக்கம்.
1) பொலித்தீன் 2) PVC
3) பொலிபுரொப்பீன் 4) பொலிஸ்ரைரின்

39) புறச்சூழலில் நிகழும் மாற்றங்களை மனிதனுக்கு அறிவிப்பது எது?
1) சமிபாட்டுத்தொகுதி 2) நரம்புத்தொகுதி
3) அகஞ்சுரக்கும் தொகுதி 4) குருதிச்சுற்றோட்டத்தொகுதி

40) விஞ்ஞானிகளிடத்தே காணப்படாதிருக்க வேண்டிய பண்புகள் பின்வருவனவற்றுள் எவை?
a) வெளியிடுபவருக்கு மரியாதை செய்யவேண்டுமாதலால் அவர் வெளியிடும் கருத்துக்களை ஏற்றல்.
b) பௌதீக நிகழ்வுகளின் போது ஏதுக்கள், விளைவுகள் தொடர்பான நம்பிக்கையை கொண்டிருத்தல்.
c) தான் வெளியிட்ட கருதுகோள்களை எவ்வகையிலேனும் நிரூபிக்கமுயற்சித்தல்.
d) ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் கிடைக்கப்பெறும் இடத்துத் தான் கொண்டிருக்கும் கருத்துக்களை மாற்றிக் கொள்ளத் தயக்கம் காட்டாதிருத்தல்.
1) aயும் bயும் 2) aயும் cயும் 3) bயும் cயும் 4) bயும் dயும்.

- சி.பாலச்சந்திரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள், சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள்(தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக்கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

- தேசியத் தலைவர் வே.பிரபாகரன்

# நமது நோக்கு

## தேசத்தின் வரலாறான மாவீரர்கள்!

இன்று மாவீரர் நாள். தியாகத்தின் உச்ச நிலையில், தங்களையே ஆகுதியாக்கி தாய்மண்ணின் விடிவுக்காகத் தம்மையே அர்ப்பணித்த வேங்கைகளின் நினைவு நாள்.

ஒடுக்கு முறைகளுக்கும், இன அழிவுக்கும் உள்ளாகியிருந்த தமிழினத்தின் உயிர்மையத்தைக் காப்பதற்காகவும் -

கண்மூடித்தனமான அரச பயங்கரவாதத்தின் கோரக்கரங்களைத் தகர்த்தழித்து, தம்மையே அரணாக்கியும் -

வெறிகொண்டு படை நடாத்தி, பூவும் பிஞ்சுகளுமாய் எமது இனம் சிதைக்கப்பட்டபோது அதனைத் தடுத்து எமக்கான படையாகியும் -

எமக்கென்றொரு மொழி, எமக்கென்றொரு மக்கள், எமக்கென்றொரு தேசமென உயர் இலட்சியங்களை வரித்துக்கொண்டு, தம் உயிர்களை அவற்றுக்காய் விலைகொடுத்தும்-

வீரவரலாறு படைத்த மாவீரர்களின் தியாகமே, எமது தேசத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் வியாபித்து நிற்கின்றது.

தமிழினம் தனக்கான மண்ணில், தனக்கான உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக- தம்மையோ, தமது வாழ்வையோ, தமது விருப்பு வெறுப்புக்களையோ பொருட்படுத்தாது - விடிவு ஒன்றுதான் எங்களின் இலக்கு எனத் தளராது துணிவுடன் களமாடியவர்களால்தான் - இந்த மண்ணும், மனிதர்களும் இன்றும் சுயகௌரவத்துடனும், எதனையும் எதிர்நோக்கும் உறுதியுடனும் வாழும்நிலை உண்டாகியிருக்கிறது.

மாவீரர்கள் - தமது சாதாரண வாழ்க்கையைத் தவிர்த்து, தமது வாழ்வின் முழுப்பரிமாணங்களையும், 'விடுதலை' என்ற உயிர்மூச்சுடன் கலந்து கொண்டே வாழ்ந்தனர்.

உயரிய இலட்சியத்திற்காக - தமக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்ததால் - இவர்கள் மக்களின் பிள்ளைகளாயினர்.

இந்தப் வேதங்களின் வழியில்தான், எமது இனத்தின் வரலாறு என்றும் சொல்லப்படும். தமிழினத்தின் உணர்வுகள், மாவீரர்களின் காவியங்களால்தான் உலகெங்கும் எடுத்துச் செல்லப்படும்.

எங்களுக்காக மரணித்தவர்களின் எண்ணங்களே, எமது மண்ணின் இதயத்துடிப்பாய் எங்கும் ஒலிக்கும்.

நான் என்ற வரையறை கடந்து நாங்கள் என்ற பரப்புக்குள் எம்மை இட்டுச்சென்ற இத்தெய்வங்களின் வரலாறு - எங்களைப் புனிதப்படுத்தட்டும்.

இந்தத் தேசத்தின் விலைமதிக்க முடியாத அரும் பொக்கிஷங்களாக, எமது மண்ணில் துயில் கொள்ளும் இம்மாவீரர்களின் தியாகத்தை, இன்று நாம் ஒவ்வொருவரும் மீட்டுக்கொள்வோம்.

விதைகுழியில் வித்தாகிக் கிடக்கின்ற எங்கள் சகோதர, சகோதரிகளின் உள்ளங்களை எமக்குள் உள்வாங்குவோம்.

தனிமனித சரித்திரங்களாய் சாதனை படைத்திட்ட எங்கள் அருந்தெய்வங்களின் வாழ்க்கை எங்களுக்குப் பாடமாகட்டும்.

ஒரு மனதாய் - சிரந்தாழ்த்தி, எங்கள் இதயங்களிலிருந்து வெளிவரும் உணர்வார்ந்த அக வணக்கங்களை எங்களின் காவல் தெய்வங்களுக்குச் சமர்ப்பணமாக்குவோம்.

எமது பாதை இதுதானென்ன உறுதிகொண்டு, எம் மாவீரர்களின் கனவுகளை நனவாக்க இன்று உறுதிபூணுவோம்.

---

மின்சார வசதிகள் விருத்தி, ஏ-9 திருத்தம் உட்பட

# டென்மார்க், ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகள் வட - கிழக்கு புனரமைப்புக்கு பாரிய நிதியுதவி

(ஒஸ்லோ)

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்காக பாரியளவிலான நிதியுதவிகளை வழங்க டென்மார்க், ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகள் முன் வந்துள்ளன.

ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலேயே இந்த அறிவிப்புக்கள் வெளியாகின. இந்த உதவிகள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக டென்மார்க் அரசாங்கம் ஏ-9 பாதையினைத் திருத்துவதற்கும், வடக்கு கிழக்கு பகுதிக்கான மின்சார விநியோகத்தினை அபிவிருத்தி செய்யவும், 17.3 மில்லியன் யூரோ நாணயத்தை வழங்கவுள்ளது. அதேவேளை, வட -கிழக்கு பகுதியின் மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு, 17.5 யூரோ நாணயங்களையும், மீள் குடியேற்றத்திற்கு 20 மில்லியன் யூரோவையும் வழங்க அந்நாடு முன்வந்துள்ளது.

இவ்வகையில் டென்மார்க் நாடே வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக உதவி வழங்க முன்வந்த முதல் நாடாகும். இதனைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு பகுதியின் அபிவிருத்திக்கென பிரித்தானியா 8 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களையும், ஜப்பான் 1.68 மிலலியன் அமெரிக்க டொலர்களையும் வழங்க முன்வந்துள்ளது.

இதே சமயம் இலங்கை முழுவதுக்குமான மனிதாபிமான உதவியாக நோர்வே 12.2 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. (01)

## அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 225 மில். செலவு!

(கொழும்பு)

தொழிற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாண்டு 40 தடவைகள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். இதனால் 20 மில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு செலவு ஏற்பட்டுள்ளது. இவ் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக அமைச்சர் பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மகிந்தானந்த அலுத் கமகே, பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில், இவ்வாண்டு ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களினால் 225 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (01)

## பாதுகாப்புவலயம் பற்றி ஆராய பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரி விரைவில் இலங்கை வருகிறார்

யாழ் .குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஆராய்வதற்காக பிரிட்டனின் முன்னாள் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஜெனரல் சேர் மைக்கல் ரோஸ் இலங்கை வரவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தை எப்படி நடை முறைப்படுத்துவது, பாதுகாப்புக்கட்டமைப்பில் மேற்கொளளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதையடுத்தே அவர் இலங்கை வரவுள்ளார்.

போர் நிரந்தரமாக ஓயும் சந்தர்ப்பத்தில் இராணுவத்தில் உள்ளவர்களை ஐ.நா அமைதிப்படையில் இணைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது இவரின் முக்கிய பணியாக இருக்கும் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் பிரிட்டிஷ் எஸ்.ஏ.எஸ் விமானப்படைப்பிரிவின் உயரதிகாரியான இவர் பின்னர் பொஸ்னியாவில் ஐ.நாப் படையில் பணிபுரிந்துள்ளார்.

## வெளிநாடுகளுடனான உறவு பாதிப்படைந்து வருகின்றது !

### லக்ஷ்மன் கதிர்காமர் குற்றச்சாட்டு

இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கை காரணமாக பல நாடுகளுடனான நட்புறவு பாதிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக் கீடடின் விவாதத்திலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், முக்கியமாக மத்திய கிழக்கு, தென் கிழக்கு ஆகிய நாடுகளுடனான உறவுகள் வேகமாக பாதிப்பு அடைந்து வருகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுக் கொள்கையை சாதுரிய மான முறையில் அமுல் செய்ய முற்படுகின்றபோதும் செயல் ரீதியாக அமுல் செய்ய வெளிவிவகார அமைச்சு தவறி விட்டது என்று தாம் கருதுவதாகவும் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் சிங்கள ஊடகவியலாளர் சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்குரிய நடவடிக்கைகளில் பிரித்தானியாவில் வாழும் சில ஊடகவியலாளர்கள் செயற்பட்டு வருவது குறித்து அமைச்சர்கள் சிலர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையர் சிலரால்தான் இந்த தீய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான பல செய்திகள் இலத்திரனியல் ஊடகங்களுக்கூடாக அவ்வப்போது வெளிவருகின்றன.

இலத்திரனியல் ஊடகம் மூலம் அண்மையில் ஒஸ்லோ மகாநாட்டில் அமெரிக்கா பங்குபற்றாது என்று செய்தி வெளிவந்துள்ளது.

இந்தச் செய்தி உண்மையில் துரோகத்தனமா னதென்றும், குழப்ப நிலையை ஏற்படுத்தக் கூடியதென்றும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குழப்பங்களை ஜே.வி.பி ஆதரவுடனான சில சிங்கள ஊடகவியலாளர்களே செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### தேர்தல், நீதி ஆணைக்குழுக்களுக்கான நியமனம்

# அரசாங்கம் சிபார்சு செய்தவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)



ஜனாதிபதி சந்திரிகா

அரசாங்கம் - ஆணைக்குழுக்களுக்கான அங்கத்தவர் களை நியமிக்கையில் ஊழல்களற்ற நேர்மையானவர்களை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் பொதுநிர்வாக ஆணைக்குழுவிலும், சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவிலும் நியமனத்திற்காக அரசாங்கம் சிபார்சு செய்தவர்களை, ஊழல் செய்யாதவர்கள் என்பதனாலேயே தான் அவர்களை நியமித்ததுடன், இவ்விரு ஆணைக் குழுக்களும் துரிதமாக செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மனித உரிமை ஆணைக்குழு- எதிர்வரும் மார்ச் மாதம் வரை செயற்படுவதற்கான கால அங்கீகாரத்தினைக் கொண்டிருப்பதால் அவ்வாணைக்குழு தொடர்ந்து இயங்க அனுமதிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால், தேர்தல் ஆணைக்குழுவும், நீதி ஆணைக் குழுவும் செயற்படுவதற்கான அங்கீகாரத்தினை தான் கொடுக்கவில்லை என்றும் அரசாங்கம் இவ்விரு ஆணைக்குழுக்களிலும் அங்கத்தவர்களாக நியமித்தவர்களின் நேர்மை மீது தனக்கு நம்பிக்கையில்லை என்பதினாலேயே தான் அவர்களுக்கான நியமனங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## 'ஆசியானி'ல் அங்கத்துவம் கோரும் இலங்கை அரசு

(கொழும்பு)

இலங்கை ஆசியான் அமைப்பில் அங்கத்துவம் கோரி விண்ணப்பித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஆசியான் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதை இடைநிறுத்தியுள்ளபோதிலும், இந்தக் கொள்கையை அது தளர்த்தும் நிலை எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# உயிரும் உடலும் உள்ளவரை மாவீரர்களே!
# உறுதி எங்கள் இலட்சியமே!!








**சக்கோட்டை கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

சக்கோட்டை,
பருத்தித்துறை.

**வல்லை ஆதி சக்தி கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

ஆதி கோவிலடி,
வல்வெட்டித்துறை.

**மயிலிட்டித்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.


பார்புகழும் ஒளிநிலவே மாவீரர்கள்
செந்தமிழ் அன்னையின் காவலரே மாவீரர்கள்
பார் ஆண்ட நம்தமிழர் படும் துயரம் கண்டு
பொங்கியே களமாடி மாய்ந்தவர்கள் மாவீரர்கள்.

செந்தமிழ் ஈழந்தன்னில் சீறியே பாய்ந்திட்ட
செந்நீர் அருவிதனை அணைகட்டி மறித்து
சிங்கள வெறியரின் கொட்டமதை அடக்கியே
சிந்துகின்ற செங்குருதி செந்தமிழ் மண்ணுக்கே
என்றனர் மாவீரர்கள்.

மதி கெட்ட மதங் கொண்ட சிங்களத்தால்
தறிகெட்டு தரம் கெட்டு உரமற்று வாழ்வதா?
அடி தொட்டு முடி தொட்டு பொலிவற்ற வாழ்வு தான் எங்கே?
முத்தமிழால் மூவேந்தர் உலகாண்ட நாளெங்கே?
தமிழீழமதில் எம் அன்னை தலை நிமிர்ந்து நல்வாழ்வு
வாழ்ந்திடவே
மண்காத்து மாவீரராகி விட்ட மறவர்களை
நாம் மறப்போமா!

கடலைக் கடைந்த நஞ்சதனை
கழுத்தினில் கொண்டான் பரமன்~ அன்று
குடலைக் குடையும் நஞ்சதனை
கழுத்தினில் கட்டினர் வீரப்புலிப்படை இன்று!

சொந்த மண்ணை மீட்டிடவே களம்பல கண்டு
வெறியர் தலை பல கொய்து காவியம் படைத்தனர்
இன்னுயிர் தாயை மறந்தனன் மண்ணுயிர் தாயை
காத்திடவும் மீட்டிடவும் மரணித்த வீரர்கள் மாவீரர்கள்.

மண்காத்த மாவீரர் புகழ் திக்கட்டும் ஓங்கிடவே
ஈழநாதம் ஒலிக்கட்டும் அகிலமெங்கும்
முரசொலியும் வானதனை பிளந்திடவே
உதயனும் சிவந்தே உதிக்கட்டும்
ஈழநாடு நன்றே மலரட்டும்
நம் மண் காத்த மாவீரர் இலட்சியம் ~ வெல்லட்டும்


**தும்பளை கிழக்கு உதய சூரியன் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.

**முனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

**வரைவுள்ள வடமாரட்சி வடக்கு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

பருத்தித்துறை.

**கற்கோவளம் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

கற்கோவளம்,
பருத்தித்துறை.

**இன்பருட்டி கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

**தொண்டமானாறு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

அக்கரை,
தொண்டமானாறு.

**சுப்பர் மடம் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

# சர்வதேசத்தின் மிகமிக உறுதியான ஆதரவு சமாதான முயற்சிகளுக்கு கிடைத்துவிட்டது!

## -ஒஸ்லோ மாநாட்டு முடிவில் விதார் ஹெல்கிசன் அறிவிப்பு-

(ஒஸ்லோ)

அமைதி முயற்சிகளுக்கான நடவடிக்கைகளில் சர்வதேச சமூகத்தின் மிகமிக உறுதியான நம்பிக்கையும் ஆதரவும் கிடைத்திருப்பதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஒஸ்லோவில் இடம்பெற்ற உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் உறுதியான ஆதரவை சமாதான முயற்சிகளுக்குத் தெரிவித்திருப்பதானது, தமக்கு மகிழ்ச்சி அளித்திருப்பதாகவும் சமாதான முயற்சிகளை மேலும் உறுதியுடன் முன்னெடுக்க இது உதவும் என்றும் ஹெல்கிசன் மேலும் தெரிவித்துள்ளார்.



## ஒஸ்லோ மாநாட்டில் 700 கோடி ரூபா நிதியுதவி

(ஒஸ்லோ)

இலங்கையின் உடனடி மனிதாபிமான உதவித்தேவைகளுக்காக சுமார் 700 கோடி ரூபாவை வழங்குவதற்கு, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒஸ்லோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் வழங்கப்படும் நிதி உடனடித்தேவைகளுக்கு பயன்படுத்தப்படும். ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அதிகளவான நிதியுதவி வழங்கப்படும் என அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

அடுத்த வருடமுற்பகுதியில் ஜப்பானியத் தலைநகர் ரோக்கியோவில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

## பாலசிங்கத்தின் உரையை முன்வரிசையில் இருந்து செவிமடுத்த அமெ.அமைச்சர்

(ஒஸ்லோ)





உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேசியபோது, அமெரிக்காவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட றிச்சர்ட் ஆர்மிரேஜ் முன்வரிசையில் இருந்து பேச்சை செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நேரத்தில் வேறொரு சந்திப்புக்காக, மாநாட்டு மண்டபத்தில் இருந்து வெளியே சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட அடிப்படையில் புலிகள் சமாதானச் செயலகங்களை நிறுவுவர்!

## நிரந்தர அமைதிக்கான முயற்சி எனத் தகவல்

(கொழும்பு)

பிராந்திய ரீதியாக சமாதானச் செயலணிகளைப் புலிகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியை தலைமையகமாகக்கொண்டு புலிகளின் சமாதானச செயலகம் செயற்பட்டு வருகிறது. இதன் மாவட்டரீதியான கிளைகளை யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, வவுனியா ஆகிய இடங்களில் அமைப்பதற்கும் புலிகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இந்தப் பிராந்திய சமாதானச் செயலகங்களின் நோக்கம், பிராந்திய மாவட்ட ரீதியான பிரச்சினைகளை ஆராய்ந்து சுமுகமான நிலையை ஏற்படுத்தி, நிரந்தரமான சமாதானத் தீர்வுக்கு வழி செய்வதேயாகும்.

இக்கிளைச் செயலகங்களை அமைப்பதற்காக, 3கோடி 63லட்சத்து 20 ஆயிரத்து 680 ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இந்நிதியை வழங்கி உதவுமாறு நோர்வே, கனடா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகிய நாடுகளிடம் கோரப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

# சம்பள ஆணைக்குழுவின் சிபார்சையே நிதிஅமைச்சரும் முன்வைத்துள்ளார்!

## ஆணைக்குழுத் தலைவர் திஸ்ஸ தெய்வேந்திர கூறுகின்றார்

நிதியமைச்சர் தனது வரவு செலவுத்திட்ட உரையிலே கூறிய பல விடயங்கள், தனது சம்பள ஆணைக்குழுவின் ஆலோசனைகளில் இடம்பெற்றுள்ள போதும், தனது ஆணைக்குழுவினை விமர்சனம் செய்தமை வேதனைக்குரியது என சம்பள மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் திஸ்ஸ தெய்வேந்திர தெரிவித்துள்ளார்.

பின்வரும் விடயங்களில் நிதியமைச்சரும், தனது ஆணைக்குழுவும் ஒரேமாதிரியான ஆலோசனைகளைக் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அவையாவன-

அரசுடமையாகவுள்ள நிறுவனங்கள் அனைத்தும் மீள் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். வினைத்திறனோடு இயங்காத அரச நிறுவனங்கள் மூடப்பட வேண்டும் அல்லது ஒன்றிணைக்கப்பட வேண்டும். அரச நிறுவனங்களில் உள்ள தேவையற்ற வெற்றிடங்களை இல்லாதொழிக்க வேண்டும். அரச நிறுவனத்திற்கு கட்டாயம் என பொதுநிர்வாக அமைச்சினாலோ அல்லது திறைசேரியினாலோ உணரப்படாத நியமனங்களை வழங்கக்கூடாது.

மேற்கூறிய பிரேரணைகளை- அமைச்சரும் சம்பள ஆணைக்குழுவும் ஒரே மாதிரியான கருத்தினைக் கொண்ட போதும் சம்பள ஆணைக்குழுவின் ஆலோசனைகள் திட்டவட்டமானவையல்ல, தெளிவில்லாதவை என நிதியமைச்சர் விமர்சனம் செய்தமை வேதனைக்குரியது. எனது ஆணைக்குழு ஒரு போதும் திட்டமற்ற வகையிலோ அல்லது தெளிவில்லாத வகையிலோ ஆலோசனைகளையோ பிரேரணைகளையோ முன்வைக்கவில்லை என்பதுடன் பொது நிர்வாகத்தில் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் உள்ளமை பற்றி எனது கருத்தினையே நிதியமைச்சரும் கொண்டுள்ளார் என்பது அவரது வரவு செலவுத்திட்ட உரை வெளிப்படுத்துகின்றது என திஸ்ஸ தெய்வேந்திர தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் ஒன்றுகூடல்

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் "உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா'' மாணவர்களின் 3 ஆவது தேசிய ஒன்றுகூடல் நாளை கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்தும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கும் மாணவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த ஒன்று கூடலுக்கு யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து 20 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

# யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவர கூட்டுப் பிரகடனம்!

## ஒஸ்லோ கூட்டத்தில் வெளியிடப்பட்டது

இலங்கையில் யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்தும் பிரகடனம் ஒன்றை, ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடுகள் கூட்டாகப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டுப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு சுமார் நூறு பில்லியன் ரூபா தேவை. இலங்கைக்கான முழுமையான உதவிகளும் இறுதியான அரசியல் தீர்வு ஒன்றை எட்டும்போதே வழங்கப்படும்.

இலங்கைக்கான வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்று - புனரமைப்புப் பணிகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்குக் கூட்டத்தில் கலந்துகொண்ட எந்தவொரு நாடும் முன்வரவில்லை. இதனால் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் சர்வதேச மனிதாபிமான அமைப்பொன்றை நிறுவுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புலிகளும் அரசாங்கமும் தமது கருத்து வேறுபாடுகள் முரண்பாடுகளையெல்லாம் மறந்துவிட்டு சமாதான முயற்சிகளில் இறங்கியிருப்பதை இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்ட நாடுகள் வரவேற்றுள்ளன. இப்பிரகடனம் இரண்டு பக்கங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ மாவீரர் நாள் நினைவு வளைவுகள்



வவுனியா நகரமத்தி



யாழ்.கே.கே.எஸ். வீதி



யாழ்.குருநகர்ப் பகுதி

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222486 (சி-198) கிளை: கொக்குவில், சுன்னாகம்.

# செம்மணி அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

செம்மணிப் புதைகுழி புலன் விசாரணைகள் பற்றிய அந்தரங்க அறிக்கை கொழும்பு நீதவான் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.டியினர் நேற்று பிற்பகல் நீதிமன்றில் இந்த அறிக்கையை சமர்ப்பித்து புலன் விசாரணைகள் தொடர்வதாக அறிவித்தனர்.

புதைகுழியில் இருந்த எலும்புகள் மீதான டி.என்.ஏ. அறிக்கைகள் மேலதிக பரிசீலனைக்காக இந்தியாவில் உள்ள ஹைதராபாத் ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கிருந்து அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை என்று சி.ஐ.டியினர் தெரிவிக்கின்றனர்.

விசாரணைகள் பற்றிய அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவரது ஆலோசனையின் பேரில் மேற்கொண்டு விசாரணைகள் தொடரும் என்றும் சி.ஐ.டியினர் கூறியுள்ளனர்.

## மாவீரர்கள்...

உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த இருபத்தோராம் திகதியன்று மாவீரர் எழுச்சி வாரம் ஆரம்பமாகியது. வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் இன்றைய மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய தினம் வட-கிழக்கின் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில்- கோப்பாய், எள்ளங்குளம், கொடிகாமம், சாட்டி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சியில்- கனகபுரம், முழங்காவில் ஆகிய இடங்களிலும், முல்லைத்தீவில்- விசுவமடு, முள்ளியவளை, அலம்பில், மணலாறு, கோடாலிக்கல்லு, துணுக்காய் ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில்- ஈச்சங்குளத்திலும், மன்னார் மாவட்டத்தில் - ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான், பரப்புக்கடந்தான் ஆகிய இடங்களிலும், திருமலை மாவட்டத்தில்- ஆலங்குளம், இத்திக்குளம், வெருகல் மற்றும் உப்பாறு, கும்புறுப்பிட்டி ஆகிய பாசறைகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், மட்டக்களப்பில்- தரவை, தாண்டியடி, கண்டலடி, ஆண்டான் குளம், மாவடி முன்மாரி ஆகிய இடங்களிலும்,அம்பாறையில்- கஞ்சிகுடிச்சாறிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்றைய மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று மாலை 6.18 மணிக்கு (புதிய நேரம்) தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை ஒலிபரப்பாக உள்ளது.

இவ் உரையைத் தொடர்ந்து மாலை 6.35 மணிக்கு- சகல இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் உள்ள மணிகள் ஒலிக்கப்பட்டு மணியோசை எழுப்பப்படும்.

தொடர்ந்து 6.36- மணிக்கு மக்கள் அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செய்வார்கள்.

தொடர்ந்து 6.37- மணிக்கு ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வுகள் நடைபெறும்.

# கடற்புலிகளின் போர்ப் படகுகள் முல்லைக் கடலில் அணிவகுப்பு

(முல்லைத்தீவு)

கடற்கரும்புலிகளதும் கடற்புலிகளதும் அணிவகுப்பு இன்று முல்லைத்தீவில் நடைபெறுகிறது. தொடர்ந்து இன்று மாலை முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்புலிகளின் போர்ப்படகுகளின் பவனியும் அணிவகுப்பும் இடம்பெறவுள்ளது.

இன்று நடைபெறும் மாவீரர் தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்ச்சியாக இவை இடம் பெறவிருக்கின்றன.

கடற்கரும்புலிகளிதும் கடற்புலிகளிதும் அணிவகுப்பு முல்லைக் கடற்கரையைச் சென்றடைந்ததும் போர்ப் படகுகளின் அணிவகுப்பு ஆரம்பமாகும்.

இதன்போது விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அமைப்பிலுள்ள பலரக போர்ப்படகுகளும், கடற்புலிகளே தயாரித்த படகுகளும் பவனிவரும் எனத் தெரியவருகின்றது.

# நள்ளிரவில் தவறான நோக்கோடு வீட்டினுள் புகுந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது பொதுமக்கள் தாக்குதல்!

நேற்று நள்ளிரவு ஊர்காவற்துறை கரைச்சிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் உள்நுழைய முற்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான சேதுபதி என்பவரை அப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து தாக்கியுள்ளனர்.

இவர் தவறான நோக்கத்துடனேயே அவ் வீட்டிற்குள் நுழைந்ததாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தாக்குதலில் அந்த உறுப்பினர் மோசமாகப் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# மாவீரர் தின ஏற்பாட்டில் ஈடுபட்ட ஹாட்லி மாணவர் மீது கெடுபிடி

**கட்டியிருந்த அலங்காரக் கொடிகள் பறிப்பு**

(பருத்தித்துறை)

மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகளைச் செய்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மீது, இராணுவத்தினர் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாவீரர் நாள் ஏற்பாடுகளுக்காக தமது பாடசாலை முன்பாகவுள்ள வீதியில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைக் கட்டி மாவீரர் நாள் ஏற்பாடுகளைச் செய்தனர். நேற்றைய தினம் மாணவர்கள் கட்டிய சிவப்பு, மஞ்சள் கொடிகளை படையினர் அகற்றியதுடன் அவற்றைத் தம்முடன் எடுத்துச்சென்று விட்டதுடன் இவற்றை 30 மீற்றருக்கு அப்பால் கட்டும்படியும் கூறியுள்ளனர்.

இதனை ஆட்சேபித்து மாணவர்கள், நேற்றுக்காலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் மாணவர்கள் ஒன்று கூடி பாடசாலைக்கு அருகாமையில் உள்ள காவலரண்களுக்கு முன்பாக மறியல் போராட்டம் செய்தனர். அகற்றப்பட்ட சிவப்பு, மஞ்சள் கொடிகளை மீண்டும் தரும்படி மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அதற்குச் செவிசாய்க்காத படையினர் இப்போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை விடியோப்படமும் பிடித்துள்ளனர்

## அமெரிக்கா...

விதித்த தடையை நீக்குவது பற்றி மறுபரிசீலனை செய்யும் என நம்புகின்றோம்.

இதேவேளை - ஒஸ்லோவில் வைத்துக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த கலாநிதி பாலசிங்கம்- "இலங்கைத் தமிழர்களின் தேசியப்பிரச்சினை தற்போது முதற்தடைவையாகச் சர்வதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை எமக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்" என்றார்.

"தமிழர் தேசியப் பிரச்சினைகளும் விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இனப்பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வுகாண இது பெரும் உதவியாக அமையும்" எனவும் அந் நேர் காணலில் சுட்டிக்காட்டினார்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.31 | 96.77 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.35 | 151.71 |
| 1 யூரோ | 95.13 | 96.25 |
| 1 சுவிஸ் பிராங் | 64.46 | 65.46 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.60 | 54.68 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 25.76 | 25.76 |

குறைந்த முதலீட்டில் உங்கள் வீட்டிலும் ஓர் அரிய பொக்கிசம், அகம் பற்றிக் கொள்ளுங்கள்



உலகத் தரம் வாய்ந்த IBM, Compaq நிறுவனங்களின் PI, PII கணனிகள் உங்களிற்காகவே யாழ் மண்ணில்

233MHz, 64Ram, Vibra sound card, CD rom, and Sound Box 22,000/=

For further details
STP
Your Partner in IT Solutions
T.P 2222674 54A, Palaly Road, Kantharmadam

# மைலந்தனை கொலை வழக்கு
## 18 சந்தேக நபர்களும் நீதிமன்றினால் விடுதலை!

(கொழும்பு)

மட்டக்களப்பு, மைலந்தனை கொலை வழக்கில் சந்தேக நபர்கள் நிரபராதிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10.00 மணிவரை தொடர்ச்சியாக 5 மணித்தியாலங்கள் ஆராய்ந்த ஜூரிகள் சபை கொலைக் குற்றச்சாட்டிற்குட்பட்ட சந்தேக நபர்களான 18 இராணுவத்தினரையும் நிரபராதிகள் என தீர்ப்பளித்துள்ளது.

1992 ஓகஸ்ட் 02ம் திகதி மைலந்தனையில் 14 சிறுவர்கள் உட்பட 34 தமிழ்ப் பொதுமக்களைக் கொலை செய்ததாக 21 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். ஆனால் வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது 3 இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கைகளின்போது இறந்து விட்டனர்.

இச்சந்தேக நபர்கள் மீது 83 குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதும் அவற்றை நிரூபிக்கத்தக்க வகையில் சாட்சியங்கள் இல்லாததால் சந்தேக நபர்கள் தமது குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்படுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. (01)

# புலிகளின் நீதிமன்றங்கள்; நாடாளுமன்றத்தில் அமளி!

(கொழும்பு)

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக சபை நடவடிக்கைகள் 40 நிமிடங்களுக்குப் பிற்போடப்பட்டன.

குழுக்களின் பிரதித்தலைவர் ஸ்ரீ அந்திரா கென்னதி சபையை 40 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் கிழக்கில் பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களை ஆரம்பிப்பது தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் சபையில் எதிர்ப்பு இயக்கம் நடத்தியதே இந்த நிலைக்குக் காரணமாகும்.

விடுதலைப்புலிகளின் செயலைக் கண்டிப்பதாக அவர்கள் சுவரொட்டிகள் போன்றவற்றை சபையில் காட்டினார்கள். இதைத் தொடர்ந்து 10.30க்கு நிறுத்தப்பட்ட சபை நடவடிக்கைகள் 11 மணிக்குப் பின்னரே ஆரம்பமாகின.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்திருந்த சுவரொட்டிகளை அகற்றுமாறு குழுக்களின் தலைவர் உத்தரவிட்டார்.

## தலைவரின்...

இதன் காரணமாக தலைவரின் குரலை உலகெங்கிலும் கேட்கக் கூடியதாக இருக்கும். ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படவுள்ள தமது அலைவரிசை குறித்துப் பல நிறுவனங்கள் முன்னறிவித்தல் செய்துள்ளன.

இதனால் உலகெங்கிலுமுள்ள லட்சக்கணக்கான மக்கள் இவ்வுரையைக் கேட்பதற்காக இன்று ஆவலுடன் காத்திருக்கின்றனர். (க)

## சர்வஜன...

பற்றித் தீர்மானிப்பதற்கு இதுவே தக்கதருணம் என ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாகவும்,

அடுத்த ஆண்டு இறுதியில் இவ்வாறான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடாத்தவுள்ளது பற்றி, தனது சட்டத்தரணிகளுடனும், கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடனும் அவர் பேசி வருவதாகவும், அந்த உறுப்பினர் கூறினார்.

அவசரகாலச்சட்டம் தற்போது நீக்கப்பட்டிருப்பதாலும், 1988இல் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டது - அரசியலமைப் பின்படி 14 வருடங்களுக்கே செல்லுபடியானது என்பதாலும் இந்த முடிவுக்கு ஜனாபதிபதி சந்திரிகா வந்திருப்பதாகவும் அந்த உறுப்பினர் மேலும் கூறினார்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா செல்லையா

அல்வாயைப் பிறப்பிடமாகவும், 46, வைமன் றோட், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா செல்லையா 26.11.02 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், திருமதி கமலாசனி சூரசங்காரன், சட்டத்தரணி மகேசன், பத்மநாதன் (முன்னாள் உத்தியோகத்தர், மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம் சென்ற சட்டத்தரணி சூரசங்காரன், தவமணிதேவி, சறோஜினிதேவி ஆகியோரின் மாமியும், Dr.அன்பழகன், அருட்செல்வன், அன்புச்செல்வன், வத்சலா, அரவிந்தன், ஆராஅமுதன், ஆதவன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பத்மநாதன்
(மகன்)

46, வைமன் றோட்,
நல்லூர்.

(சி/224)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.